தினகரன் 6-11-2011

## மாவட்டம்



கூடங்குளம் அணு உலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி பாளையில் அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### பாளையில்

# அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் ஆர்ப்பாட்டம்

நெல்லை, நவ. 6: கூடங்குளம் அணு உலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி பாளையில் அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கூடங்குளம் அணு உலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில் பாளை பஸ் நிலையம் எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. கடையம் திருவள்ளுவர் கழக தலைவர் அறிவரசன் தலைமை வகித்தார். பாளை மறைமாவட்ட கத்தோலிக்க பிஷப் ஜூடு பால் ராஜ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

ஆதி தமிழர் பேரவை தலைவர் அதியமான், தமுமுக மாநில துணைப் பொதுச் செயலாளர் ரிபாயி, பாமக மாநில கொள்கை பரப்பு செயலாளர் வியனரசு, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாநில குழு உறுப்பினர் சங்கர பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் நாடு பெண்கள் இணைப்புக்குழு நிர்வாகி செல்லத்தாய், நாம் தமிழர் கட்சி மாவட்ட பொறுப்பாளர் செந்தில், பா.ஜ. மாவட்ட பொறுப்பாளர் கார்த்திக் நாராயணன் ஆகியோர் பேசினர்.

அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் உதயகுமார், புஷ்பராயன், அரசியல் குழு உறுப்பினர் மனோ தங்கராஜ் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். அணுமின் நிலையத்தை நிரந்தரமாக மூட வேண்டும். இதற்கு தமிழக முதல்வர் அமைச்சரவையை கூட்டி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். கூடங்குளம் அணு உலையை எதிர்த்து மீனவர்கள் மட்டுமே போராட்டம் நடத்துவது போல் மத்திய அரசு கொச்சைப்படுத்தி பேசி வருகிறது. அனைத்து கட்சியினருமே அணு உலை வேண்டாம் என எதிர்த்து தான் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர். 'மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அணு உலையை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தி பேசினர். பல்வேறு கட்சி நிர்வாகிகள், கூடங்குளம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆண்கள், பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.